கலைஞர் 100
1924 - 2023

**சுருக்கம்**

தமிழர்திருநாள் தைப்பொங்கல் 2024 – அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறு வாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பில் தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் முழுக் கரும்பு வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(டி1)த் துறை**

அரசாணை (2டி) எண்.01 நாள் 02.01.2024

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
மார்கழி மாதம் 17-ம் நாள்

படிக்கப்பட்டவை:

1. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். வர்த்8/043032/ 2023, நாள். 10.11.2023, 30.11.2023 மற்றும் 01.12.2023.
2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் நக.எண். வர்த்8/044988/2023 நாள். 30.11.2023.

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநரின் கடிதங்களில், எதிர்வரும் 2024ஆம் ஆண்டிற்கான, பொங்கல் பரிசுத் தொகுப்பாக அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் முழுக் கரும்புடன் கூடிய தொகுப்பு வழங்கிட, 31.10.2023 அன்றைய தேதி நிலவரப்படி, 2,19,57,402 எண்ணிக்கையிலான குடும்ப அட்டைதாரர்க்ளுக்கு வழங்கிடும் பட்சத்தில் தோராயமாக ரூ. 238,92,72,741/- (ரூபாய் இருநூற்று முப்பத்து எட்டு கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஒன்று மட்டும்) செலவினம் ஏற்படும். அதன் விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | பொருட்கள் | குடும்ப அட்டை ஒன்றுக்கு வழங்கப்படவுள்ள பொருட்களின் அளவு | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் கொள்முதல் விலை கிலோ ஒன்றுக்கு | குடும்ப அட்டைதாரார்களின் எண்ணிக்கை | மொத்த செலவினத்திற்கான உத்தேச தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) = (4 x 5) |
| 1. | பச்சரிசி | 1 கிலோ | ரூ.35.20 | 2,19,57,402 | 77,29,00,550/- |
| 2. | சர்க்கரை | 1 கிலோ | ரூ.40.614 (கொள்முதல் விலை ரூ.38.68 + சரக்கு மற்றும் சேவை வரி 5% ரூ.1.934) | 2,19,57,402 | 89,17,77,925/- |

(த.பி.பா.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | முழுக் கரும்பு | 1 எண்ணம் | ரூ.33/- (போக்குவரத்து செலவினம் மற்றும் வெட்டுக் கூலி உட்பட) | 2,19,57,402 | 72,45,94,266 |
| | | | | மொத்தம் | 238,92,72,741/- |

i. 2024 ஆம் ஆண்டு தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படவுள்ள பச்சரிசியினை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காக கொள்முதல் செய்யும் நிறுவனமான தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா லிட். (NCCF) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வெளிச்சந்தை விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.35.20 வீதம் கொள்முதல் செய்யவும், அதனை அரசு நியாயவிலைக் கடைகள் மூலம் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் வழங்கிட வேண்டியும்,

ii. 2024 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படவுள்ள சர்க்கரையினை, பொது விநியோகத்திட்டத்திற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் சர்க்கரைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அக்டோபர் 2023 மாத விலையான கிலோ ஒன்றுக்கு ரூ. 40.614 என்ற வீதத்திலும் கொள்முதல் செய்யவும், அதனை அரசு நியாயவிலைக் கடைகள் மூலம் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் வழங்கிட வேண்டியும்,

iii. 2,19,57,402 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் வழங்கிட ஏதுவாக, முழுக் கரும்பினை கொள்முதல் செய்வதற்கு சென்ற ஆண்டைப்போல் முழுக் கரும்பு ஒன்றுக்கு தோராயமாக ரூ.33/- வீதம் (போக்குவரத்து செலவினம் மற்றும் வெட்டுக் கூலி உட்பட) கொள்முதல் செய்திட அனுமதி வழங்கிட வேண்டியும், 29.12.2022 நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசாணை (2டி) எண். 96-ல் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, மாவட்ட ஆட்சியர் தலைமையில் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர் ஆகியோரை உள்ளடக்கிய குழு அமைத்து அந்தந்த மாவட்ட அளவில் முழுக் கரும்பினை கொள்முதல் செய்து விநியோகம் செய்திட அனுமதித்தும், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அவர்களுக்கு உரிய நிதியினை ஒப்பளிப்பு செய்திட அனுமதி வழங்கிட வேண்டியும்,

iv) பச்சரிசி, சர்க்கரை மற்றும் முழுக் கரும்பு ஆகியவற்றிற்கு ஆகும் மொத்த செலவினத் தொகை ரூ. 238,92,72,741/- க்கு (ரூபாய் இருநூற்று முப்பத்து எட்டு கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஒன்று மட்டும்) நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கிட வேண்டியும் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, 2024-ஆம் ஆண்டு தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடிட ஏதுவாக கீழ்க்கண்ட இனங்களான பச்சரிசி, சர்க்கரை மற்றும் முழுக் கரும்பு கொள்முதல் செய்வதற்கு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:-

i) 2024-ஆம் ஆண்டு தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படவுள்ள பச்சரிசியினை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காக கொள்முதல் செய்யும் நிறுவனமான தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா லிட்., (NCCF) மூலம் அந்நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வெளிச்சந்தை விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.35.20 வீதம் கொள்முதல் செய்து அதனை அரசு நியாயவிலைக் கடைகள் மூலம் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் வழங்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

ii) அரசாணை (நிலை) எண்.95, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (பி1) துறை, நாள். 25.07.2023-இன்படி மே 2024 வரை தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா லிட்., (NCCF) மூலம் வெளிச்சந்தை விலையில் பச்சரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.35.20 மற்றும் புழுங்கல் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.35.40 வீதம் 7.00 LMT அரிசி கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 16(f)-ஐ தளர்வு செய்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதற்கு தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா லிட்., (NCCF) உடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (TNCSC) ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது பொங்கல் திருநாளுக்கு கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பச்சரிசி அளவு 0.21958 LMT மட்டுமே. எனவே, தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தின் படியே கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள 2,19,57,402 கிலோ (0.21958 LMT) பச்சரிசியையும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா லிட்., (NCCF) மூலமே கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

iii) 2024 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்படவுள்ள சர்க்கரையினை, பொது விநியோகத் திட்டத்திற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் சர்க்கரைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அக்டோபர் 2023 மாத விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.40.614 என்ற வீதத்தில் கொள்முதல் செய்து அதனை அரசு நியாயவிலைக் கடைகள் மூலம் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் வழங்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

iv) 2,19,57,402 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் வழங்கிட ஏதுவாக, முழுக் கரும்பினை கொள்முதல் செய்வதற்கு சென்ற ஆண்டைப்போல் முழுக் கரும்பு ஒன்றுக்கு தோராயமாக ரூ.33/- வீதம் (போக்குவரத்து செலவினம் மற்றும்

வெட்டுக் கூலி உட்பட) கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், 29.12.2022 நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசாணை (2டி) எண். 93-ல் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, மாவட்ட ஆட்சியர் தலைமையில் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர் ஆகியோரை உள்ளடக்கிய குழு அமைத்து அந்தந்த மாவட்ட அளவில் முழுக் கரும்பினை கொள்முதல் செய்து விநியோகம் செய்திட அனுமதி வழங்கப்படுகிறது.

v) பச்சரிசி, சர்க்கரை மற்றும் முழுக் கரும்பு ஆகியவற்றிற்கு ஆகும் மொத்த செலவினத் தொகை ரூ. 238,92,72,741/- க்கு (ரூபாய் இருநூற்று முப்பத்து எட்டு கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஒன்று மட்டும்) நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

3. மேலே பத்தி 2இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"3456 - 00 - நுகர்பொருள் வழங்கல் 103 நுகர்வோர் உதவித் தொகைகள் - மாநிலச் செலவினங்கள் - AE பொது விநியோக முறை உதவியுடன் சமூகப் பாதுகாப்பு - உணவு உத்திரவாதம் 311 மானியங்கள் - 02 - பொதுவான மானியம்".

IFHRMS த.தொ.கு (3456 - 00 - 103 - AE - 31102)

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.01/கூ,உ(ம)நு.பா/2024, நாள். 02.01.2024 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

கே.கோபால்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை - 600005.
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை -600 010.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை - 600010.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
முதன்மை மாநில கணக்காயர். சென்னை 600 018.
மாநில கணக்காயர்(தணிக்கை). சென்னை 600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு ), சென்னை - 600 008.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 60 009,
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை – 600 009.
மாண்புமிகு வேளாண்மை – உழபர் நலத் துறை அமைச்சர் அலவலகம், சென்னை-600 009.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை
அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின்
தனிச்செயலாளர், சென்னை – 600009.
வேளாண் உற்பத்தி ஆணையர் / முதன்மைச் செயலாளர்,
(வேளாண்மை – உழவர் நலத் துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
பொது (ம.வா) துறை, சென்னை - 600009.
நிதி (வ.செபொ . I/II/ கூ உ (ம) நு பா/வ.வ. I) த்துறை,
சென்னை – 600009.
தேசியத் தகவல் மையம், சென்னை – 600 009.
உதிரி/ இருப்புக்கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

02/01/2024

பிரிவு அலுவலர்.

02/01/2024